# உட்கட்சி ஜனநாயகத்திற்க்கான ஒரு வழிகாட்டி

FRIEDRICH
EBERT
STIFTUNG

# உட்கட்சி
# ஜனநாயகத்திற்க்கான
# ஒரு வழிகாட்டி

எப்.ஈ.எஸ் வெளியீட்டு இல. 74

முதற் பதிப்பு

**உட்கட்சி ஜனநாயகத்திக்கான ஒரு வழிகாட்டி**

பதிப்பாசிரியர்:

பேராசிரியர் டாக்டர் தோமஸ் மேயர்

மொழிபெயர்ப்பாளர்:

நிரஞ்ஜலா அருள்நந்தி

தொகுப்பாசிரியர்கள்

பேராசிரியர் நோபர்ட் அந்தனி

ஜோஸப் அருள்வாசகம்

மாதவகலா ஸ்ரீதரன் பன்னீர்செல்வம்

பதிப்புரிமை © பிரட்றிச் ஈபர்ட் மன்றம் 2008

ISBN 978-955-607-052-1

வெளியீட்டாளர்: FRIEDRICH EBERT STIFTUNG இல. 04 அடம்ஸ் ஒழுங்கை கொழும்பு 04.

# முகவுரை

ஒரு சமூகத்தை ஜனநாயக வழியில் நடத்துவதில் அரசியல் கட்சிகளே ஊக்கிகளாகவும், மிக முக்கிய காரணிகளாகவும் திகழ்கின்றன. ஆனால் அவை தம்மை ஜனநாயக வழியில் ஒழுங்கமைத்து இருந்தால் மட்டுமே இது சாத்தியமாகும்.

முக்கியமாக ஜனநாயக பாதையின் ஆரம்ப கட்ட மாற்றங்களுக்கு முகங்கொடுத்து கொண்டிருக்கும் நிலைமாற்று நிலையில் உள்ள சமூகங்களில் அதிகார தோரணை அடிப்படையிலான தலைமை கட்சியானது, ஜனநாயகத்திற்கு முன்னரான சமூகத்தை பல காலமாக தனது ஆதிக்கத்தின் கீழ் வைத்திருக்கின்றது.

இந்நூலில் உட்கட்சி ஜனநாயகம் காணப்படுவதற்கான நிபந்தனைகள் மற்றும் அவ்விலக்கை அடைவதற்கான பாதை தொடர்பாகவும் ஆராயப்பட்டுள்ளது. கட்சியின் அடிப்படை நிகழ்ச்சித்திட்டம் மற்றும் விசேடமாக, அதன் அபிவிருத்தி செயற்பாடுகள் முக்கிய பங்கினை வகிக்கும். ஜனநாயகத்தின் அடிப்படை விழுமியங்கள் அதை நடைமுறைப்படுத்தும் உத்தரவாதத்தையும் கொண்டுள்ள சிறந்த கட்சி சட்டம் வெற்றிகரமாக உட்கட்சி ஜனநாயகத்தை உருவாக்கும் ஒரு பிரதான காரணியாக தம்மை நிருபிக்கலாம்.

# உள்ளடக்கம்


| | | |
|---|---|---|
| 1. | ஜனநாயகத்திற்கு கட்சிகள் அவசியம் | 01 |
| 2. | சகலரும் பங்குகொள்ளும் கட்சி ஜனநாயகம். | 05 |
| 3. | ஜனநாயக கட்சிகளின் செயற்பாடுகள் | 10 |
| 4. | மூன்று வகையான கட்சிகள் | 13 |
| 5. | உட்கட்சி ஜனநாயகம் | 20 |
| 6. | கட்சியின் யாப்பு | 24 |
| 7. | தலைமைத்துவமும் கட்சி ஜனநாயகமும் | 28 |
| 8. | கோட்பாட்டடிப்படையிலான கட்சிக்கான வழிமுறை | 31 |
| 9. | அரசியல் கலாசாரமும் கட்சி உருவாக்கமும் | 39 |
| 10. | கட்சிகளும் சிவில் சமூகமும் | 44 |

அதிகார தோரணை அடிப்படையிலான தலைவர் கட்சியிலிருந்து வெகுஜன அங்கத்துவக் கட்சியை நோக்கி...

# 1. ஜனநாயகத்திற்கு கட்சிகள் அவசியம்

கட்சிகளுக்குள் ஜனநாயக குறைபாடு அத்துடன் முக்கியமாக, பொது மற்றும் சமூக வாழ்கையில் அதன் அதிகாரபூர்வமான கேள்வி போன்றவற்றால் ஏற்பட்டுள்ள திருப்திகரமற்ற தன்மைக் காரணத்தால், கட்சிகள் அரசியல் சமூகத்திலிருந்து முற்றாக விலகியிருத்தல் வேண்டும், ஏனெனில் "உண்மை ஜனநாயகத்திற்கு கட்சிகள் தேவையில்லை" என்ற கூற்று பல சந்தர்ப்பங்களில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இவ்வாறான மெய்யான அடிமட்ட ஜனநாயகத்திற்கான அழைப்பானது கட்சிகள், அரசாங்கங்கள், மற்றும் பாராளுமன்றங்கள் போன்ற அரசியல் பிரதிநிதிகள் அல்லது அரசியல் ஸ்தாபனங்கள் தங்களுடைய சமூகத்திற்கும் வாக்காளர் தொகுதிகளுக்கும் ஓரளவாயினும் சுதந்திரமாக மாறும் தன்மையை காட்டும் அனுபவங்களிலிருந்தே எழுகின்றது. கட்சிகள் தங்கள் தளங்களை விருத்தி செய்து நிலைநாட்டி கொள்வதற்கும் தங்களுடைய சொந்த நலன்களுக்கும் தேவைகளுக்கும் முதலிடம் கொடுத்து அவர்கள் பிரதிநிதித்துவப்படுத்த வேண்டியவர்களின் நலன்களிலிருந்தும் அபிப்ராயங்களிலிருந்தும் விலகி

கொள்கின்றன. ஆளப்படுபவர்களின் நேரடி சுயஅரசாங்கத்தினாலேயே ஜனநாயகத்தின் முழு தேவைகளை இறுதியில், பூர்த்தி செய்ய முடியும், என்ற திட நம்பிக்கையிலேயே ஓர் அடிப்படையான அடிமட்ட ஜனநாயகம் சார்ந்துள்ளது.

பிரஜைகள் ஒன்றாக வாழ்ந்து, தங்களுடைய சொந்த காரியங்களை சகல இடங்களிலும் தாங்களே ஜனநாயக ரீதியாக தீர்த்து கொள்ள வேண்டும். இவ்வெண்ணக் கருவிற்கமைய அதிக சந்தர்ப்பங்களில் நடுவர் நிறுவனங்களோ, ஸ்தாபனங்களோ அற்ற நகரக் கூட்டங்களில் அல்லது சங்கங்களில் நேரடி ஜனநாயகத்தை நடைமுறைப்படுத்தல் அவசியம். பிரஜைகள் தங்களது பிரச்சனைகளை அல்லது தேவைகளை தாங்களே முடிவுக்கு கொண்டுவருமாறு கேட்டுக் கொள்ளப்பட்டால் அவர்கள் ஒன்றாக கூடி சம பங்காளர்களாக நேரடி பேச்சு வார்த்தையிலிறங்கி மாற்று வழிகள் தொடர்பாக கலந்துரையாடி தீர்மானங்களை எடுத்து சமூகத்திற்காக அவற்றை செயற்படுத்த முயல்வார்கள்.

எவ்வித ஸ்தாபக அமைப்புமற்ற, ஊக்கத்துடன் பற்கேற்கும் பிரஜைகளின் வலையமைப்பான 'சிவில் சமூகத்தவர்களே'சகல அரசியல் கோரிக்கைகளுக்கு தேவையான நடவடிக்கைகளையும் தீர்மானங்களையும் அளிக்கக்கூடிய ஒரே அரசியல் அதிகாரத்தை கொண்டவர்கள். இம் மாதிரிக்கமைய, நேரடி

ஜனநாயகத்திலுள்ள மக்களின் தீர்மானங்கள் அல்லது விருப்பங்கள் முற்றாக, நேரடியாக மற்றும் எவ்வித மாற்றங்களும் செய்யாது நடைமுறை அரசியல் தீர்மானங்களாக மாற்றப்படுகின்றன.

எனினும், இம்மாதிரியானது ஒரு தவறான வழிகாட்டலாக அமையக்கூடும். சில ஆயிரக்கணக்கான பிரஜைகளைக் கொண்ட ஒரு சிறிய தெளிவாக காணக்கூடிய அரசியல் சமூதாயத்தினை கொண்டிருந்தாலே நேரடி ஜனநாயகமானது வெற்றிகரமாக அமையும். பரந்து காணப்படும் பிரதேசங்களில் பரந்து வாழும் லட்சக்கணக்கான பிரஜைகளைக் கொண்ட பாரிய சமூகங்களுக்கு இது பொருத்தமற்றது. பிராந்திய, தேசிய, மற்றும் உலகலாவிய ரீதியில் முக்கியத்துவம் பெறும் ஆழமான அரசியல் கேள்விகளுக்கு மறுமொழி பகர்ந்து செயற்பட வேண்டுமாயின் ஜனநாயகத்திற்கு அரசியல் கட்சிகள் அவசியமாகும். நேரடி ஜனநாயகக்கூறுகள் தனிப்பட்ட சந்தர்ப்பங்களில் கட்சிகளுக்கு பக்கபலமாக அமையக்கூடிய பொழுதிலும் அவற்றிட்கு மாற்றீடாக செயற்பட முடியாது.

பிரதிநிதித்துவ ஜனநாயக கட்டுப்பாட்டுக்குட்பட்டு ஒன்றுக்கொன்று அதிகரித்து செல்லும் பிரதிநிதித்துவ அமைப்புகளின்றி சனத்தொகை குறைவாகவுள்ள பரந்த நாடுகளில் முக்கியமாக, உலக சமுதாயத்தில் ஜனநாயகத்தை அடைவது சாத்தியமில்லை.

நவீன ஜனநாயகத்தில் அரசியல் கட்சிகளே பிரதான ஸ்தாபன வடிவங்களாகக் காணப்படுகின்றன. இதனால் இவர்கள் உண்மை ஜனநாயக விதிமுறைகளை அனுசரித்து செயற்பட வேண்டும்.

ஜனநாயகக் கட்சி சீர்திருத்தங்களுக்கு வழிவகுக்கும் அரசில் கட்சிகளின் உட்கட்டமைப்பு தொடர்பாக மற்றும் செயற்படும் விதம் குறித்த நியாாயமான விமர்சனங்கள் ஜனநாயகத்திற்கு அனுகூலமாகவே அமைகின்றது. ஜனநாயகம் வினைத்திறன் மிக்கதாக உருவாகுவதற்கு வெகுஜன அங்கத்துவ கட்சிகள் தேவைபடுகின்றதே தவிர ஏகாதிபத்திய அதிகார தோரணையின் அடிப்படையிலான தலைமைத்துவம் கொண்ட கட்சிகள் தேவைப்படுவதில்லை.

பிரதிநிதித்துவ ஜனநாயக கட்டுப்பாட்டுக்குட்பட்டு ஒன்றுக்கொன்று அதிகரித்து செல்லும் பிரதிநிதித்துவ அமைப்புகளின்றி சனத்தொகை குறைவாகவுள்ள பரந்த நாடுகளில் முக்கியமாக, உலக சமுதாயத்தில் ஜனநாயகத்தை அடைவது சாத்தியமில்லை.

## 2. சகலரும் பங்குகொள்ளும் கட்சி ஜனநாயகம்

மிக முக்கியமான ஜனநாயகச் செயற்பாடுகளை நிறைவேற்ற இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட கட்சிகள் அதிகாரத்திற்கு போட்டியிடலாம், ஆனால் இறுதியில் யார் ஆட்சியை கைப்பற்றுவது என்பதை வாக்காளர்களே தீர்மானிக்கலாம். இதுவே போதுமானதென சாதாரண ஜனநாயக மாதிரிகள் கருதுகின்றன. இம்மாதிரியில் சமூகமானது ஆட்சி அதிகார செயற்பாடுகளை தாம் கட்டுபடுத்தலிலும், அதில் ஈடுபடுவதிலும், அதிகாரத்தில் பங்கேற்பதிலுமிருந்து விலக்கப்படுகின்றது. தேர்தல்களுக்கிடையில் நிகழும் செயற்பாடுகளில் செல்வாக்கு செலுத்த முடியாதுள்ளது. அத்துடன் தொடர்ந்து வரும் தேர்தல்களின் முக்கிய தீர்மானங்களில் பங்கேற்பதென்பது காலங்கடந்த செயலாகவுள்ளது.

மேலும், அரசியல் பங்களிப்பானது வெறுமனே தேர்தல்களில் சம்பந்தப்படுவதோடு மாத்திரமே கட்டுப்படும் நிலையில் பிரஜைகளுக்கு முக்கிய விடயங்கள் தொடர்பாக போதியளவு தகவல் அல்லது விளக்கம் கொடுக்கப்படாத காரணத்தால் ஜனநாயகச் செயற்பாடுகளுக்கான சாத்தியக் கூறுகள் மட்டுபடுத்தப்பட்ட நிலையிலேயே காணப்படுகின்றது. கட்சிகள்

மீதுள்ள நம்பிக்கையின்மை மேலோங்கி அவ்வாறான சூழ்நிலையில் நிலைத்து அநேக சந்தர்ப்பங்களில் நியாயப்படுத்தக்கூடிய விடயமாக உள்ளது. இப்படியான சந்தர்ப்பத்தை தவிர்ப்பது கடினம்.

> மெய்யான ஜனநாயகத்தின் நிபந்தனைகளானது, அரசியல் தீர்மானங்கள் தொடர்பாக நிரந்தர பங்களிப்பினைச் செய்யும் பல பிரஜைகளை கொண்ட சகலரும் பங்கு கொள்ளும் ஜனநாயகத்திற்கே நன்கு பொருந்துகின்றது.

சகலரும் பங்கு கொள்ளும் ஜனநாயகத்தை உணர்த்தும் மூன்று முக்கிய கூறுகள்.

- செயற்பாட்டிலிருந்து சுயேட்சையாக செயற்படக்கூடிய, விமர்சனம் செய்ய வல்ல பொதுமக்கள்,
- செயற்திறன்மிக்க சிவில் சமூகம் மற்றும் ,
- சமூகத்தின் வெளிப்படையான, ஜனநாயக வெகுஜன அங்கத்துவத்தாலான கட்சிகள்.

ஒரு பன்மைவாத கட்சி, ஜனநாயகத்தில் அரசியல் செயல்திறனையும் பங்களிப்பினையும் ஒன்றோடொன்று இணைத்து செயற்படுத்த முடியும். பல்கட்சி ஜனநாயகத்தில் செல்வாக்கிற்கும், அதிகாரத்திற்கும், மற்றும் சமூக நிலை மாற்றத்திற்கும் பல்வேறு கட்சிகள்

ஒன்றோடொன்று போட்டியிடுகின்றன. ஒரு புறம் ஓரளவேனும் மைய ஆட்சிக்குட்படுத்தப்பட்டு நாடளாவிய ரீதியில் தங்களது பெயரை நிலை நாட்டியுள்ள கட்சிகள் பெரும் ஸ்தாபனங்களாகவுள்ளன. இவை நன்கு ஒழுங்குபடுத்தப்பட்டுள்ள சந்தர்ப்பத்தில் சமுதாயங்கள், மாநகரங்கள் மற்றும் கிராமங்களின் அரசியல் குறிக்கோள்களை, கூட்டாட்சி மாநிலங்கள் தொட்டு தேசிய மட்டம் வரைக்கும் காணப்படும் சகல மட்டங்களிலும் உள்ள அரசியல் ஸ்தாபனங்களால் நியாயமாகக் கருதி ஏற்றுக்கொள்ளப்பட்ட தீர்மானங்களை எடுக்கும் நடவடிக்கைகளுடன் இணைத்து செயற்படலாம். அடிமட்டங்களில் நன்கு செயற்படும் ஜனநாயகமானது பரந்த செயலாற்றல் மிக்க சிவில் சமூகத்திலேயே உருவாக்கப்பட்டுள்ளது.

> சமூகத்தில் ஜனநாயக பங்களிப்பு, அதிகாரக் கட்டுப்பாடு மற்றும் அரசியல் ஒருமைப்பாடு போன்றவற்றை அடைய வேண்டுமானால் கட்சிகளுக்குள் ஜனநாயகச் செயற்பாடு அவசியம்.

ஒரு புறம் ஜனநாயகக் கட்சிகள் சகல மட்டங்களிலுமான ஒருங்கிணைந்த நடவடிக்கைகளினூடாக அரசியலை செயற்திறனுடன் நடாத்த முடியும். இதன் மூலம் மனதிலுள்ள சில குறிக்கோள்களுடன் ஒரு சமுதாயத்தினை முற்றாக சீரமைக்க முடியும். மறுபுறம் இக்கட்சி ஜனநாயக முறையில் ஒழுங்குபடுத்தப்பட்டிருக்கும் சந்தர்ப்பத்தில் சகல

மட்டத்திலுமான தீர்மானங்களை எடுக்கும் நடவடிக்கையிலும் செயலாற்றல் மிக்க அதிக எண்ணிக்கையிலான மக்களின் பங்களிப்பினைப் பெற்றுக்கொள்ள முடியும். மூன்றாவதாக சிவில் சமூகத்திற்கும் அரசாங்க ஸ்தாபனத்திற்குமிடையிலான ஒரு நெருங்கிய தொடர்பினை இவை பிரதிநிதித்துவப்படுத்துகின்றன.

சிவில் சமூகத்தில் உருவாகும் கருத்துக்கள், அபிப்பிராயங்கள், சிந்தனைகள், பண்புகள் எதிர்பார்ப்புக்கள் மற்றும் நம்பிக்கைகள், ஆகியவை ஒன்று திரட்டி செம்மைப்படுத்தி கொண்டுவரப்படுகின்றன. இவை ஒன்றுசேர்க்கப்பட்டு நடைமுறைத்திட்டமாக மாற்றப்படுகின்றன. இதன் மூலமாக தேர்தலில் வெற்றிபெறும் பட்சத்தில் பாராளுமன்ற அல்லது அரசாங்க நடைமுறைச் செயற்பாடாக மாற்ற முடியும். நாட்டில் அரசியல் ஒருமைப்பாட்டின் நோக்கத்திற்கு ஜனநாயக கட்சிகள் இவ்வாறு சேவையாற்ற முடியும்.

பல கட்சிகளுக்கிடையிலான போட்டியின்மூலம் அரசாங்கங்களை மாற்றி அமைக்ககூடிய சாத்திய கூறுகள் உள்ளபடியால் அரசாங்க கொள்கைகள் முறையான மற்றும் செயல்திறன் மிக்க விமர்சனத்தை எத்தருணத்திலும் செய்ய வழிவகுக்கின்றன. இது பொது மக்களிடையே காணப்படும் விமர்சன கலந்துரையாடலை குறுகியதாக மாற்ற அக்கட்டமைப்பு வழிவகுப்பதோடு அரசியல் மாற்றுவழிகளைப் பிரஜைகளே எப்பொழுதும் தீர்மானிக்க வழியமைக்கின்றது.

இக்காரணத்தால் செயற்பாட்டிலிருக்கும் கட்சி ஜனநாயகமானது, பொது நலனிற்காக பொது மக்கள் மத்தியில் அரசியல் திட்ட செயற்பாடுகள் தொடர்பாக கலந்துரையாடல் மற்றும் அரசியல் நடவடிக்கைகளில் ஆர்வமுள்ள பல பிரஜைகளின் பங்களிப்பு மூலமாக வளம்மிக்க அரசியல் போட்டியினை முன்னெடுத்து செல்லலாம். இதன் மூலம் ஜனநாயக அரசியல் குறிக்கோள்களான செயல்திறன் மற்றும் பங்களிப்பினை ஒன்றிணைத்து செயற்படலாம்.

மேற்கூறியவாறு இயங்க நல்ல ஸ்தாபனங்கள் இருக்க வேண்டியது மட்டுமின்றி பிரஜைகளின் மனதிலும், எண்ணத்திலும் பொதுவான ஜனநாயக அரசியல் கலாசாரம் காணப்பட வேண்டியது அவசியமாகும். நடைமுறைச் செயற்பாடுகளில் ஏனைய கட்சிகளின் நிலையை சகலரும் அங்கீகரித்து ஜனநாயகம் பாதிப்புக்குள்ளாகாதவாறு முரண்பாடுகள் மற்றும் பிரச்சனைகளை குறைத்துக் கொள்ள வேண்டும். அத்துடன் உட்கட்சி ஜனநாயகத்தைப் பலவீனமான ஒன்றாக கருதி செயற்படாது, அதை கட்சியை நன்கு திடப்படுத்தும் சக்தியாக நோக்குதல் வேண்டும்.

# 3. ஜனநாயக கட்சிகளின் செயற்பாடுகள்

நவீன ஜனநாயகமானது நல்ல வழியில் செயற்பட வேண்டுமாயின், அவ்வரசியற் கட்சிகள் ஜனநாயகத்திற்கான சேவைகள் எனப்படும் பல செயற்பாடுகளைப் பூர்த்தி செய்ய வேண்டும். இச்செயற்பாடுகளைச் சரிவர ஆற்ற கட்சிகளுக்கு சொந்த உள்ளக ஒழுங்கமைக்கபட்ட ஸ்தாபனம் அவசியமாகும்.

கடந்த அல்லது நிகழ்கால உதாரணங்களை நோக்குகையில், நீண்டகாலமாக கட்சிகள் தங்களுடைய பிரதான செயற்பாடுகளை நிறைவேற்றாத பட்சத்தில் அவற்றினுடைய கௌரவம், ஆதரவு மற்றும் இறுதியில் சமூக அங்கீகாரத்தையும் இழக்கின்றன. அதன் பின்னர், அநேக சந்தர்ப்பங்களில் இவை சமூகத்தில் எதிர்த்து போராடும் இயக்கங்களான கண்டன இயக்கங்கள், பாராளுமன்ற வெளியக எதிர்ப்பு குழு மற்றும் ஆயுத எதிர்ப்பு இயக்கங்கள் போன்றவற்றிற்கு இலக்காகின்றன.

ஆகவே, ஜனநாயகத்திற்கு அவசியமான செயற்பாடுகளைப் பூர்த்தி செய்தல் கட்சிகளின்

ஜனநாயகத்தைப் போன்றே நாட்டின் ஜனநாயகத்திற்கும் நன்மை பயக்கும்.

இவற்றின் மிக முக்கிய செயற்பாடுகளாவன:

– பெரும்பாலானவர்களினால் ஏற்றுக் கொள்ளப்பட்ட திட்டங்களை அபிவிருத்திசெய்து சமூகத்தின் பெருமானங்கள் மற்றும் நலன்களை ஒன்றிணைத்தல்.

– பொருளாதாரம், அரசு மற்றும் சமூகத்தினை மாற்றியமைக்கும் மாற்றுவழி சந்தர்ப்பங்களை சமூகத்திற்கு வழங்கும் தேர்தல் விவாதங்களை நடத்துதல்.

-- சிந்தனைகள், மதிப்பீடுகள், மற்றும் சமூகத்தின் அரசியல் பிரச்சனைகளுக்கான மாற்றுவழி நடவடிக்கைகள் போன்ற முக்கிய விடயங்களை முன்வைப்பதன் மூலம் சமூகத்தின் அரசியல் குறிக்கோள்களை உருவாக்கும் செயற்பாட்டிற்கு அவசிய பங்களிப்புகளைச் செய்தல்

-- அரசியல் சமூகமயமாக்கலும், கட்சி அங்கத்தவர்களுக்கு தொடர்ச்சியான அரசியல் பங்களிப்பு சந்தர்ப்பங்களை வழங்கி அரச பதவிகளுடாக அரசியல் பொறுப்புகளையும் அரசியல் தலைமைத்துவ செயற்பாடுகளையும் கற்பித்தல்.

அரச பதவிகளுக்கான வேட்பாளர்களுக்கு பயிற்சியளித்தலும் மற்றும் சேவை காலத்தின் பொழுது அவர்களை வினைத்திறனுடன் கண்காணித்தலும்.

அரசியற் செயற்பாடுகளுக்காக (தேர்தல்களுக் கிடையிலேயும்) ஆயத்தப்படுத்தப்பட்ட சமூகத்தின் தொடர் பங்களிப்பிற்கு சந்தர்ப்பங்களை வழங்கல்

வெகுஜன அங்கத்துவக் கட்சிகளாக தங்களை முறையாக ஒழுங்குபடுத்தி கொண்ட கட்சிகளே ஜனநாயகத்தின் பிரதான கடமைகளை நிறைவேற்றக் கூடியவை என்பது நன்கு புலப்படுகின்றது.

# 4. மூன்று வகையான கட்சிகள்

ஒரு நாட்டின் ஜனநாயக அபிவிருத்தியின் ஆரம்பக் கட்டத்தின் போது ஜனநாயக மேம்பாட்டிற்கு முற்று முழுவதுமாக தடைக்கல்லாக அல்லது சுமையாக மாறும் அபாயத்தைத் தோற்றுவிக்கும் பல்வேறு வகையிலான கட்சிகள் அநேக சந்தர்ப்பங்களில் நீண்ட காலமாகச் செயற்பட்டு வருகின்றன.

கொள்கை ரீதியில் 20ஆம் நூற்றாண்டின் வரலாற்றில் பல்வேறு நாடுகளிலும் கண்டங்களிலும் குறிப்பிட்ட வகையில் தங்களது கருத்தை வெளிப்படுத்தும், ஒன்றுக்கொன்று வேறுப்பட்ட மூன்று வகையான அரசியல் கட்சிகளைக் காணக்கூடியதாகவுள்ளது:

1. தலைமைத்துவ அதிகார தோரணையின் அடிப்படையிலான கட்சி
2. கௌரவ பிரஜைகள் சார்ந்த கட்சி
3. வெகுஜன அங்கத்துவக் கட்சி

## 1. தலைமைத்துவ அதிகார தோரணையின் அடிப்படையிலான கட்சி:

தனிப்பட்ட ஒருவரின் தலைமைத்துவம் மற்றும் அவரது தனிக் குழுவின் கீழ் இயங்கும் கட்சி அதிகார தோரணையடிப்படையில் இயங்கும் கட்சியாக கருதலாம். தலைமைத்துவமே இக்கட்சிகளை உருவாக்குகின்றது, சேவையாளர்களை நியமிக்கின்றது மற்றும் அங்கத்தவர்களை இணைத்துக் கொள்வதைப் பற்றிய தீர்மானத்தை எடுக்கின்றது. இதனால் கட்சி இவர்களுடைய தனிப்பட்ட சொத்தாகக் கருதப்படுகின்றது.

தலைமைத்துவத்திற்கு பதில் கூறும் பொறுப்பு இக்கட்சியைப் பின்பற்றுபவர்களுக்கு உள்ளது. இக்கட்சியின் அங்கத்தவர்கள் ஜனநாயக ரீதியில் தெரிவு செய்யப்படாமல் தலைமைத்துவத்தில் தங்கி நின்று அவரைப் பின்பற்றுபவர்களாக உள்ளனர். இவ்வாறான கட்சியின் ஒட்டிணைவாற்றல், மோசடி வஞ்சனை போன்ற சமமற்ற உறவினாலேயே உருவாக்கப்பட்டுள்ளது. இக்கட்சியின் ஆதரவாளர்கள் தங்களுக்குக் கிடைக்கப்பெறும் தனிப்பட்ட சலுகைகளுக்கு கைமாறாக எவ்வித நிபந்தனைகளையும் முன்வைக்காத மற்றும் விமர்சனங்கள் செய்யாது தலைமைத்துவத்தைப் பின்பற்றுகின்றனர்.

அதிகார தோரணையில்லாத தலமைத்துவ கட்சிகள் அதன் அங்கத்தவர்கள் கருத்துக்களை வெளியிடுவதிலிருந்து

கட்டுப்படுத்தப்பட்டு சந்தர்ப்பம் கிடைக்கும் பொழுது இயன்றளவு வெற்றியை ஜனநாயகத்தில் நீண்ட காலத்திற்கு தமதாக்கி கொள்ளலாம். முக்கியமாக, மத்திய அரசாங்கத்தின் பங்குபற்றுவதன் மூலம் அரசியலில் வெற்றியை தமதாக்கி கொள்ளும் வரை அதிகார தோரணையில்லாத தலமைத்துவங்களுக்கு இது ஒரு செயற்திறன் மிக்க முறையாக தோன்றும். இதன் மூலம் சட்டவாட்சியினால் ஆளும் ஜனநாயக அரசின் கொள்கைகளுக்கு நேர்மாறாக அரச சேவையில் உயர் பதவி, வருமானம், கௌரவம், போன்ற வடிவங்களில் லாபங்களைப் பெற்று கொள்கின்றனர். அங்கத்தவர்கள் அரசியலில் தங்களது கருத்தை வெளியிடாது விட்டுக் கொடுப்பதற்கு பரிமாற்றமாக மேற்குறிப்பிட்ட தனிப்பட்ட ரீதியிலாலான நன்மைகள் கொடுக்கப்படுகின்றன.

## 2. கௌரவ பிரஜை சார்ந்த கட்சி:

பொருளாதாரத் துறை, அரச துறை மற்றும் சமூகத்தில் பிரபலமான கௌரவ பதவிகளில் இருக்கும் தனிப்பட்ட நபர்கள் உருவாக்கும் கூட்டு தலைமைத்துவம் கொண்ட ஸ்தாபனங்களை இது கொண்டிருக்கும். அநேக சந்தர்ப்பங்களில், முக்கியமாக ஐரோப்பிய வழக்கங்களில் ஒரு சமூகத்தில் அரசியல் பிரதிநிதித்துவத்தை எதிர்பார்த்திருக்கும், ஆரம்பகட்டத்தில் கௌரவ பிரஜைகள் சார்ந்த கட்சிகள் முற்போக்கான தாராளமயமாக்கலையும் ஜனநாயகமயமாக்கலையும் அபிவிருத்தி செய்கின்றன. எனினும் சமூகத்தில் பரந்த வெகுஜன பங்களிப்பு ஒரு போதும் காணப்படுவதில்லை.

கௌரவ பிரஜைகள் மற்றும் அங்கத்தவர் களுக்கிடையிலான உறவு இரு சாராரினதும் நம்பிக்கையிலேயே தங்கியுள்ளது. அதாவது அங்கத்தவர்கள் இக் கௌரவ பிரஜைகளின் நேர்மையில் நம்பிக்கை வைத்து சமூகத்தின் உயர் மட்டங்களில் அவர்கள் வகிக்கும் நிலையை சார்ந்த ஒத்துழைப்புக் குழுக்களோடு பொது நலத்திற்கான அக்கறையில் நல்லிணக்கத்துடன் இணைந்து செயற்படுவார்கள் என்று எதிர்பார்க்கின்றனர். அத்துடன் தங்களுடைய வரையறுக்கப்பட்ட திறமைகள் மற்றும் உறவுகள் மூலமாக சிலவற்றை சாதிப்பதை விட கௌரவ பிரஜைகளின் சிறப்பாற்றல்கள் மற்றும் சமூக அங்கீகார வலையமைப்பின் மூலம் பலவற்றை அடைய முடியுமென்றும் நம்புகின்றனர்.

கௌரவ பிரஜைகள் சார்ந்த கட்சிகளின் வெற்றிக்கு சமூகத்தில் பெரும்பகுதியினர் கௌரவ பிரஜைகளால் சிறப்பாக பிரதிநிதித்துவப் படுத்தப்பட்டு முக்கியமாக, அரச குறிக்கோள்களின் மேம்பாட்டில் இவர்களின் செல்வாக்கு முக்கிய இடத்தைப் பெறுகின்றது. இவர்கள் பிரபல பேராசிரியர்கள் அல்லது செல்வாக்கு மிக்க குடும்பத்தின் அங்கத்தவர்கள் அல்லது பிராந்தியத்தில் முன்னணி வகிக்கும் விவசாயிகளாகவும் இருக்கக்கூடும்.

அதிகார தோரணையிலான சமூகங்களிலிருந்து ஜனநாயக சமூகங்கள் மற்றும் அரசியல் தொடர்புகளை நோக்கிய பாதையில் ஒரு மாற்றத்தை ஏற்படுத்தும் சிறப்பு விசை என்பதை கௌரவ பிரஜைகள் சார்ந்த கட்சிகள்

நிரூபித்துள்ளன. ஒரு வகையில் அரச உயர் பதவிகள் மற்றும் வழக்கங்கள் போன்றவற்றினால் சட்டபூர்வமாக்கப்பட்ட மரபுவழி அதிகாரங்களைக் கொண்ட பழமை வாய்ந்த சமூகத்தின் அரசியல் கலாசாரத்தை இவர்கள் பிரதிநிதித்துவப்படுத்திய போதிலும் மறுகையில் பன்மைவாதப் பங்களிப்பினை நோக்கிய முதல் பாரிய அடியினை எடுத்து வைக்க வழிவகிக்கின்றது.

## 3. வெகுஜன அங்கத்துவக் கட்சிகள்:

உட்கட்சி தேர்தலின் மூலமாக ஊழியர்கள் மற்றும் அரசியல் போன்றவை தொடர்பாக மிக முக்கிய தீர்மானங்களை இறுதியில் எடுக்க வேண்டிய வெகுஜன அங்கத்துவ ஸ்தாபன ரீதியான கொள்கைகளை கொண்டதாக இருக்கின்றது.

இவ்வகையிலான கட்சி, ஐரோப்பிய கட்சி தோற்றங்களில் ஒரு நியமமாக மாறிக்கொண்டிருக்கும் சமூகங்களின் ஜனநாயக செயற்பாடுகளில் தன்னை நிலைநாட்டிக் கொண்டிருக்கின்றது. கட்சியின் செயற்பாட்டாளர் பிரதிநிதித்துவம் மூலமாக சமூகத்தின் சகல பிரதேசங்களும் பிரதிநிதித்துவப்படுத்தப்படல் வேண்டும், என்ற கொள்கையின் அடிப்படையில் வெகுஜன அங்கத்துவ கட்சியின் உருவாக்கமும் எண்ணமும் உள்ளது. முடிந்தளவு முழு சமூகத்தையும் பிரதிநிதித்துவப்படுத்தும் அங்கத்தவர்கள் கட்சியின் எண்ணங்கள், அடிப்படை அரசியல் பண்புகள், அரசியல்

நடவடிக்கை தொடர்பான செயற்பாடு மற்றும் வெளிப்படையான விவாதத் திட்டங்கள் போன்றவற்றின் அடிப்படையில் போட்டியிடும் பல்வேறு கட்சிகளில் நியமிக்கப்படுவார்கள். கட்சியின் பொதுக் கோட்பாட்டினை தெளிவாக முன் வைப்பவர்கள் பெரும்பாலான மக்களின் நம்பிக்கையை சம்பாதித்து அவர்களின் மனதை மாற்றக்கூடிய மற்றும் பாராளுமன்றம், அரசாங்கம் மற்றும் அரசியல் ஸ்தாபனங்களில் கட்சிக் குறிக்கோள்களை வினைத் திறனுடன் செயற்படுத்துகின்றமை போன்றவற்றின் அடிப்படையில் தலைமைத்துவத் தன்மையை கொண்ட நபர்கள் தெரிவு செய்யப்படுகின்றனர்.

வெகுஜன அங்கத்துவக் கட்சிகளுக்கு வலிமையான நம்பிக்கையை ஏற்படுத்தகூடிய தலைமைத்துவ நபர்கள் அவசியமாகும். தெரிவு செய்யப்படும் தலைவர் ஜனநாயகப் பங்களிப்பு பாங்கிலான தலைமைத்துவத்தை அடைய முயற்சிக்க வேண்டும். அதைவிடுத்து முன்நிலையிலிருக்கும் தனிப்பட்டவரின் ஆதிக்கம் வெகுஜன அங்கத்துவ கட்சியின் கொள்கைகளுக்கு எதிராக செல்வதற்கு இடமளித்தல் கூடாது. ஜேர்மனியின் சமூக ஜனநாயகத்தில் திரு. வில்லி பிராண்ட் என்பவர் தலைவராக இருந்த காலகட்டத்தில் இந்நிலையை காணக்கூடியதாகவிருந்தது. அனைவரையும் இணைத்து செயற்படும் அவரது தலைமைத்துவம் மற்றும் கலந்துரையாடல்களிலும் தீர்மானங்களை எடுப்பதிலும் பெரும்பாலான அங்கத்தவர்களையும் அவர்களது

பிரதிநிதிகளையும் உள்ளடக்கும் முறையினூடாக கட்சியின் அரசியல் நோக்கினை மாத்திரம் பிரதிநிதிதுவப்படுத்தாது, தீர்மானங்களை எடுக்கும் பொழுது உட்கட்சி ஜனநாயக கொள்கைகளையும் மனதில் வைத்து செயல்பட்டார்.

உட்கட்சி ஜனநாயகத்தைக் கொண்ட வெகுஜன அங்கத்துவ கட்சிகள் சகலரும் பங்கு பெறும் ஜனநாயகத்தை உருவாக்குகின்றது. ஆனாலும் இத்தலைமைத்துவம் அனைவரையும் ஒருங்கிணைத்து செயற்படும் பாங்கில் நடந்து கொள்ளுமாயின் மட்டுமே வலிமையான தலைமைத்துவத்தை எதிர்த்து நிற்க முடியும்.

## 5. உட்கட்சி ஜனநாயகம்

சகல ஜனநாயக கடமைகளையும் அரசாங்கத்தில் மாத்திரமே அரசியற் கட்சிகளினால் செயற்படுத்த முடியும் என்பது அனைவரும் அறிந்த ஒரு விடயம். ஜனநாயக முறையில் இக்கட்சிகள் கட்டமைக்கப்பட்டிருக்கும் அளவிற்கே முக்கியமான ஜனநாயகச் செயற்பாடுகளை நிறைவேற்ற முடியும்.

> தலைமைத்துவ கட்டுப்பாடு, அதன் தெரிவு, மற்றும் தீர்மானங்கள் எடுக்கும் நடவடிக்கைகளில் அங்கத்தவர்களின் பங்களிப்பு போன்றவற்றை உறுதி செய்யும் உட்கட்சி ஜனநாயகமே அதிகார தோரணையிலான தலைவர் கட்சிக்கு மெய்யான மாற்றுவழியாகக் அமையும்.

உட்கட்சி ஜனநாயகம் சரியாக செயற்படுத்தப் பட்டால் மட்டுமே கட்சிகள் மீது சமூகத்துக்கு இருக்கும் செல்வாக்கை பொறுத்து அதன் அடிப்படை ஜனநாயகச் செயற்பாடுகளை வினைத்திறனுடன் நடைமுறை படுத்தப்படுவதை உறுதி செய்ய கூடிதாயிருக்கும்.

ஜனநாயக தேர்தல் மூலம் அதிகாரத்தைக் கைப்பற்றியவுடன் ஜனநாயகத்தைக் கட்டுபடுத்தாமல் அல்லது கட்சிகள் தங்களது நிலையை துஷ்பிரயோகம் செய்யதிருப்பதையும் உறுதி செய்வது உட்கட்சி ஜனநாயகமே. ஜனநாயகம் தன்னைத்தானே அழித்து கொள்ளாது, பாதுகாக்கும் முறையின் பகுதியாக அனைத்து கட்சிகளினதும் உட்கட்சி ஜனநாயகம் திகழ்கின்றது.

வரையறுக்கப்பட்ட ஜனநாயகங்களில் உட்கட்சி ஜனநாயகமானது தனிப்பட்ட கட்சிகளினுடைய தலைமைத்துவத்தின் சுய விருப்பங்களுக்கு அமைய செயற்பட இடமளிக்க முடியாது. ஜேர்மனி உட்பட்ட பல நாடுகள் வலியுறுத்துவது போல், தேவைப்படும் பொழுது கட்சி தலைமைத்துவத்தின் திட்டங்களுக்கு எதிராக நடந்து கட்சி அங்கத்தவர்கள் அல்லது அரசாங்கம் சட்டங்களை புதிதாக உருவாக்கியோ அல்லது அங்கீகரிக்கப்பட்ட சட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படுவதையோ உறுதி செய்ய வேண்டும்.

சந்தேகங்கள் எழும் பட்சத்தில், செயற்திறன் மிக்க உட்கட்சி ஜனநாயகத்திற்கு சட்டத்தால் உறுதி செய்யப்பட்டதும் சட்டபூர்வமாக நடைமுறை படுத்தக்கூடிய வகையில் பின்வரும் ஸ்தாபன ரீதியான முற்பாதுகாப்பு முறைகள் அவசியம்:

பல்வேறு முக்கிய விடயங்கள் தொடர்பாக கட்சியின் நிலைப்பாடு மற்றும் குறிப்பிட்ட தலைமைத்துவத்தின்

அரசியல் போன்றவற்றைப் பற்றிய கட்சி அங்கத்தவர்களின் எவ்வித தடையுமற்ற வெளிப்படையான விவாதங்கள்.

- கட்சிக்குள்ளே அரசாங்கப் பதவிகளை வகிக்கும் பட்சத்தில் இப்பதவிகளுக்கான உட்கட்சி தேர்தல்.

- ஒன்று அல்லது இரண்டு வருடத்திற்கு ஒரு முறை என்ற அடிப்படையில் தலைமைத்துவத்திற்கான தேர்தல் மற்றும் கட்சிக் கொள்கை சம்பந்தமான தீர்மானங்கள் கொண்ட கட்சி மாநாடுகளை நடத்துதல்.

- ஒரே கட்சிப் பதவிக்கு பல்வேறு தனிப்பட்ட வேட்பாளர்கள் போட்டியிடுவதை, ஜனநாயக கட்சி வாழ்வின் அடிப்படை செயற்பாடாக சகலரும் ஏற்றுக்கொள்ள வேண்டும்.

- அரசியலில் நிலைத்து நிற்கும் சந்தர்ப்பத்தினை அதிகரிப்பதற்காக பதவிகளுக்கு தேர்ந்து எடுக்கப்பட்டவுடன் கட்சி செயற்பாட்டாளர்கள் அதிகாரத்தினையும் செல்வாக்கினையும் தம்வசப்படுத்திக் கொள்வதை தவிர்ப்பது கடினம். இதைக் கட்சிக்குள் கட்டுப்படுத்த மேற்கொள்ளப்படும், தலைமைத்துவ கொள்கை தொடர்பான வெளிப்படையான கலந்துரையாடல் உட்கட்சி ஜனநாயக நிலையைப் பாதுகாக்கும் ஒரு முக்கிய வழிமுறையாகவுள்ளது.

- உட்கட்சி ஜனநாயகத்தின் முக்கிய பகுதியாக கட்சியினுள் செயற்பாட்டிலுள்ள தன்னிச்சையானதோர் நீதித்துறை மிகவும் முக்கியமான ஒன்றாகும். தனிப்பட்ட அங்கத்தவர்களின் ஒழுங்கு அல்லது நடத்தை தொடர்பாக அவர்களுக்கெதிராக எடுக்கப்பட வேண்டிய ஒழுக்காற்றல் நடவடிக்கை அல்லது கட்சிக்கு பெரும் பாதகத்தை ஏற்படுத்தும் சந்தர்ப்பத்தில் அவர்களைக் கட்சியை விட்டு நீக்கும் தீர்மானங்கள் போன்றவை சம்பந்தமாக தீர்மானிக்க நடுவர் குழு இருப்பது அவசியம். இவர்கள் கட்சி மாநாட்டிற்கே பதில் கூற வேண்டிய பொறுப்புள்ளவர்களாக இருக்க வேண்டும். அத்துடன் கட்சி மாநாட்டிலேயே இவர்கள் தெரிவு செய்யப்பட வேண்டும். ஒவ்வொரு கட்சி அங்கத்தவரும் நியமிக்கப்பட்டிருக்கும் இம்முறையை அணுகுவதற்கு ஏற்றவாறு ஒழுங்குபடுத்தப்பட்டிருத்தல் வேண்டும். அத்துடன் இச்சபையின் தீர்மானங்கள் மற்றும் கடமைகள் தொடர்பாக கட்சித் தலைமைத்துவதிற்கு எவ்வித நேரடிச் செல்வாக்கும் இருக்கக்கூடாது.

## 6. கட்சியின் யாப்பு

உட்கட்சி ஜனநாயகத்தின் அடிப்படைக் கோட்பாடுகள் நிலைநாட்டப்பட்டு நடைமுறையில் பேணப்பட்டு வருகின்றதா என்பதை நாட்டின் வழக்கமான நீதி மன்றமானது உறுதி செய்ய கூடியதாயிருப்பது அத்தியாவசியமாகும். இது சாத்தியப்பட தெளிவான சட்டபூர்வமாக ஏற்றுக்கொள்ளப்பட்ட அடிப்படை நிபந்தனைகளைக் கொண்ட கட்சி சட்டமே முக்கியமாக தேவையாகவுள்ளது. சந்தேகங்கள் எழும் பட்சத்தில், அங்கத்தவர்களும், வழக்கமான நீதி மன்றமும் அவ்வாறாக அழைக்கப்படும் சந்தர்ப்பத்தில் கட்சி சட்டத்தை ஆராய்ந்து இறுதியாக தீர்மானங்களை வழங்கலாம்.

கலாசார மற்றும் சமூக வழக்கங்களுக்கமைய, நாட்டுக்கு நாடு குறிப்பிட்ட ஸ்தாபனத்தின் நிபந்தனைகள் வேறுபடும். எனினும், இவ்வடிப்படை நிபந்தனைகள் ஜனநாயகத்தின் முக்கியமான அங்கங்களாகும். அத்துடன் இவை பேரம் பேசி முடிவை மாற்ற கூடிய விடயமல்ல.

உட்கட்சிக் குறிக்கோள்களை மேம்படுத்தும் செயற்பாடுகளை வினைத்திறனுடன் ஒழுங்குபடுத்தவும், விமர்சனங்களை வினைத்திறன்மிக்கதாக மாற்றவும் மற்றும் அரச சேவை உயர்

பதவிகளுக்கும் தொழிலுக்கும் வேட்பாளர்கள் தெரிவு செய்யப்படுவதை சாத்தியமாக்குவதற்கும் உலகளாவிய ரீதியில் காணப்படும் உட்கட்சி ஜனநாயகத்தில் ஒரு கட்சி தற்பொழுதுள்ள போக்குகளையும் சுபாவங்களையும் கொண்டிருத்தல் வேண்டும்.

பல்வேறு இயக்கங்கள் படிப்படியாக சுயேட்சையாக மாறி கட்சிக்குள் இணைந்து செயற்படும் தன்மை பலவீனமடைய இடமுண்டு. எனினும், இவ்வாபத்து நிச்சயமாக நிகழும் என்பதை உறுதியாகக் கூறமுடியாது. ஆனால், கட்சித் தலைமைத்துவம் கட்சிக்குள் விமர்சனங்களையும் மாற்று வழிகளையும் தடுத்து கட்சி வாழ்வினையும் விவாதத்தையும் கடும் கட்டுப்பாட்டின் கீழ் வைத்திருக்க முனைந்தால் அப்படி நிகழ இடமுண்டு.

விமர்சனம், பன்மைவாத கட்சிக் கொள்கைகள் மற்றும் வெளிப்படையான தன்மை கட்சியின் நாளாந்த வழக்கங்களாக உள்ளபட்சத்தில் அங்கத்தவர்கள் மனசாட்சியுடனும் தனிப்பட்ட ஊக்கத்துடனும் பொது மக்களிடையே கட்சியின் குறிக்கோள்களையும் தீர்மானங்களையும் மதித்து அதற்கு உறுதுணையாக நின்று செயற்படுவதை எதிர்பார்க்கலாம். எனினும் பெரும்பாலான கட்சி அங்கத்தவர்கள் மீது தலைமைத்துவத்தினால் கட்சி தீர்மானங்கள் திணிக்கப்பட்டு தங்களுடைய நம்பிக்கைகள், ஆலோசனைகள், மற்றும் எண்ணங்கள் கட்சி குறிக்கோள்களின் அபிவிருத்தியில் அங்கீகரிக்கப்படாத பட்சத்தில் இவ்வாறான அக்கறை குறைந்து காணப்படும்.

ஜனநாயகத்தில் குறிப்பிட்டளவிலான பன்மைவாதமானது பலவீனத்தின் அறிகுறி அல்லாது பலத்தையே உருவாக்கிறது. இறுதியில் இது கடமையாற்றும் ஆற்றலை குறைப்பதைவிடுத்து அதிகரிக்கின்றது என்றே கூறலாம்.

ஜனநாயக வெகுஜன அங்கத்துவக் கட்சியில் உட்கட்சி ஜனநாயகமும் ஒழுங்கும் வெளியில் ஒன்றையொன்று அனுமானித்து அனுபந்தம் செய்கின்றது.

பரவலாக காணப்படும் தவறான அபிப்பிராயங்களுக்கு மாறாக கட்சியானது பல்முகங்களைக் கொண்டதாயும், இதற்குள் இறுக்க நிலை தோன்றுமாயின் கட்சியின் வினைதிறனுக்கு எவ்விதத்திலும் பிரதிகூலமானதல்ல. கட்சியினது உட்கட்டமைப்பு நியாயமான ஒன்றிணைப்பிற்கும் பல்வேறு நிலமைகளுக்கும் இடமளிக்குமாயின் உடன்பாடின்மை, முரண்பாடுகள், கருத்து வேறுபாடு போன்றவைகளின் ஒருங்கிணைப்பின் மூலம் கட்சியின் வினைத்திறன் அதிகரிக்கலாம்.

ஜனநாயகத்தில் தேர்தல் வாதங்களுக்கும் கட்சி அங்கத்தவர்கள் வாதங்களுக்குமிடையில் ஓர் இறுக்க நிலை எப்பொழுதும் எற்பட இடமுண்டு. கட்சி அங்கத்தவர்கள் தங்களுடைய சொந்தக் கருத்துக்களையும் நோக்கங்களையும் முன்வைப்பதில் அதிக ஆர்வம் காட்டுகின்றனர். ஆனால் பாராளுமன்ற ஆசனங்களுக்கும் அரச துறையில் உயர் பதவிகளுக்கும்

போட்டியிடும் வேட்பாளர்கள் தேர்தலில் வெற்றியை காண இவற்றுடன் பரவலான சமூக அக்கறையையும் நோக்கங்களையும் மனதில் கொண்டு செயற்பட வேண்டும். கட்சி மற்றும் தேர்தலில் வெற்றிபெறும் சாத்திய கூறுகள் என்ற இரண்டு நோக்குகளுக்குமிடையில் நியாயமான விட்டுக் கொடுப்பினை அடைவது அரசியல் கட்சியின் நடத்தையில் வாழ்வில் சமநிலைப்படுத்தும் சூட்சுமமான ஒரு நடைமுறையாகும்.

## 7. தலைமைத்துவமும் கட்சி ஜனநாயகமும்

ஜனநாயகத்தைப் பற்றிய அதிகபட்ச உயர்வான அபிப்பிராயம் கொண்டவர்கள் தலைமைத்துவமும் ஜனநாயகமும், கொள்கை ரீதியில் ஒத்துச் செயற்படும் தன்மையற்றவை என்ற கருத்தைப் பரவலாக கொண்டுள்ளனர். இது வேறுபட்ட வகையிலான அரசியல் தலைமைத்துவங்கள் உள்ளதென்றவிடயத்தை கவனியாது புறக்கணிக்கும் ஜனநாயகத்தை பற்றிய தவறான கருத்தாகும். ஜனநாயகக் கொள்கைகளுடன் ஒவ்வாத சில தலைமைத்துவங்கள் நடைமுறையில் காணப்படும் பொழுதிலும் ஜனநாயகத்தின் வெற்றியை உறுதிப்படுத்தும் தலைமைத்துவங்களும் உள்ளன.

ஜனநாயக தலைமைத்துவமானது ஒருங்கிணைந்து பங்களிப்பு செய்யும் ஒன்றாகும். ஒவ்வொருவரும் தங்களை முறையாக இனங்கண்டு கொள்ளக் கூடியவாறு வெவ்வேறு எண்ணங்கள் ஒருங்கிணைக்கப்பட்டு பல்வேறுபட்ட அரசியல் கருத்துக்களையும் எண்ணங்களையும் ஐக்கியப்படுத்தி, குறிப்பிட்ட பெரும்பாலான வாக்காளர்களினதும் கட்சி அங்கத்தவர்களினதும் அங்கீகாரத்தை பெற்று கொள்ள

முடியும். அதிகாரத்தின் மூலமாக எதனையும் திணிக்காது சகலருடைய கருத்துக்களையும் எண்ணங்களையும் ஒருங்கிணைத்து, அதேவேளை தன்னுடைய நிலையையும் வலியுறுத்தி கூறும் வினைத்திறன் மிக்க ஜனநாயக தலைமைத்துவம் அரசியல் கட்சிகளுக்கு இன்றியமையாதது. இது அங்கத்தவர்களின் பங்களிப்பினை தவிர்த்து செயற்படுவதைப் பார்க்கிலும் அதை எதிர்பார்த்து செயலாற்றுகின்றது. நீண்டகால நிலையான மற்றும் வினைத்திறன் மிக்க சாதூரியமான தலைமைத்துவம் எனும் பொழுது தலைமைத்துவத்திற்கும் அங்கத்தவர்களுக்குமிடையில் கருத்து ஒற்றுமை உள்ளது என்பதைக் குறிக்கின்றது. தலைமைத்துவ கொள்கைக்கமைய தங்களுடைய எண்ணங்களுக்கும் கருத்துக்களுக்கும் மதிப்பளிக்கப்படுகின்றது என்ற நியாயமான உணர்வு அங்கத்தவர்கள் மத்தியில் காணப்படும் பொழுது இவ்வாறான வினைத்திறன் மிக்க சூழ்நிலை உருவாகின்றது.

பெரும்பாலான கட்சி அங்கத்தவர்கள் ஆதரவு வழங்காத ஒரு தனிப்பட்ட விடயத்திற்க்கு அல்லது கருத்திற்கு ஆதரவு திரட்ட முயலும் கட்சித் தலைவர், நாட்டின் நலன் கருதி அதற்கு தன்னுடைய ஆதரவை வழங்கி நியாயமான நல்ல காரணங்களை முன் வைத்து வாத விவாதங்கள் மூலமாக அதற்கான ஆதரவை வென்றெடுக்க முயற்சிக்கும் செயற்பாடு ஜனநாயக தலைமைத்துவத்தை உணர்த்துகின்றது. தலைமைத்துவத்தின் அணுகுமுறை திருப்திகரமானதா என்பதை கட்சி தலைவருக்கான

அடுத்து வரும் தேர்தலின் முடிவுகள் எடுத்துக்காட்டும். தூரநோக்கு மற்றும் ஓர் பொது நம்பிக்கையை சகலரும் கொண்டிருப்பதால் கட்சியின் பெரும்பாலானவர்கள் தன்னைப் பின்பற்றி வருவார்கள் என்ற நியாயமான நம்பிக்கையின் பிரகாரம் கட்சி தலைவர் புதிய நிலைகளை நோக்கி எந்தளவு தூரத்தையும் கடந்து செல்வர் என்ற தன்மை போன்றவை தலைமைத்துவ இயல்புகளாகும்.

ஜனநாயக தலைமைத்துவமானது ஏகாதிபத்திய தோரணையுடன் தீர்மானங்களை எடுக்கும் வகையாக அதிகாரத்தைப் பிரயோகிப்பதை குறிக்காது, மாறாக பெரும் பாலானவர்களின் ஆதரவைப் பெறும் வகையில் பல்வேறு எண்ணங்களை ஒருங்கிணைத்துச் செயற்படுவதை குறிக்கும்.

தலைமைத்துவத்திற்கும் அங்கத்தவர்களுக்கும் சமமாகச் செல்லக்கூடிய கட்சியின் கோட்பாடுகளே ஜனநாயக தலைமைத்துவத்தின் அடிப்படையாகும். கட்சி தலைவர்களின் ஜனநாயக பண்புகள் கட்சி அங்கத்தவர்களால் தீர்மானிக்கப்பட்ட அடிப்படை திட்டத்தில் பிரதிபலிக்கும்.

# 8. கோட்பாட்டடிப்படை கட்சிக்கான வழிமுறை

பல காரணங்களுக்காக அனைவருக்கும் நியாயமான அடிப்படை செயற்ப்பாட்டுத் திட்டம் ஜனநாயக வெகுஜன அங்கத்துவக் கட்சிகளுக்கு தேவைப்படும். இது பதவி வகிப்போருக்கு அப்பால் சகல அங்கத்தவர்களாலும் நியாயமாக ஏற்றுக் கொள்ளப்பட்டு ஜனநாயகச் செயற்பாட்டில் உருவாக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

கட்சி அங்கத்தவர்களால் தலைமைத்துவ கொள்கைகள் பற்றிய விமர்சனங்கள் கட்சியின் நன்மைக்காகவும் நியாயமானதாகவும் ஏற்றுக் கொள்ளவும் செவி கொடுக்கவும் வேண்டும்.

அதனால் அதிகார தோரணையிலான தலைமைத்துவக் கட்சியிலிருந்து வெகுஜன அங்கத்துவக் கட்சியை நோக்கிய மாற்றத்திற்காக அடிப்படை திட்டத்தின் மேம்பாட்டிற்கும் முகாமைத்துவத்திற்கும் முக்கியத்துவம் கொடுக்கப்படுகின்றது.

இணைந்த அடிப்படைத் திட்டத்திற்கான ஜனநாயக அபிவிருத்திச் செயற்பாடே மெய்யான வெகுஜன அங்கத்துவக் கட்சியின் நிபந்தனைகளை உருவாக்கும் வினைத்திறன் மிக்க யுக்திகளில் ஒன்றாகும்.

சகல அங்கத்தவர்களாலும் வெளிப்படுத்தப்பட்டு பரிமாறப்படும் அரசியல் அடையாளம் மற்றும் பொது நலன்கள் கொண்ட ஜனநாயக கட்சிகளுக்கான அடிப்படைத் திட்டங்களின் ஆவணத்தை உருவாக்கும் செயற்பாட்டின் இறுதி ஆக்கம் எழுத்துகளில் மாத்திரம் அடங்கவில்லை. திட்ட உருவாக்க செயற்பாடும் அநேக சந்தர்ப்பங்களில் சமமான அல்லது அதிக முக்கியத்துவத்தைப் பெறுகின்றது.

அடிப்படைத் திட்ட உருவாக்கம் நிபுணத்துவம் வாய்ந்தவர்களுக்கு மாத்திரம் உரித்தான வேலைத்திட்டமல்ல. எனினும் அவர்கள் முடிவெடுக்கும் வினைத்திறன் மிக்க பங்களிப்பினை நிச்சயம் செய்கின்ற பொழுதிலும் அவர்களது பாத்திரம் கட்டுப்படுத்தப்பட்ட ஒன்றாகும். இதை விட, தெளிவாக அனுபவம் சார்ந்த திட்ட உருவாக்கச் செயற்பாட்டில் கட்சி அங்கத்தவர்களின் பங்களிப்பினைப் பெற்றுக்கொள்வது அத்தியாவசியமாகும். இது சாத்தியப்பட பல்லாயிரம் வழிகளுண்டு. அத்துடன் ஒரு நாட்டின் குறிப்பிட்ட சூழ்நிலை, கலாசாரம், பண்பாடு,

அரசியற் கட்சியின் முன்னைய வரலாறு மற்றும் அதன் இணை ஸ்தாபனங்கள் போன்றவற்றிலேயே முற்றிலும் தங்கியுள்ளது.

கட்சிக் கோட்பாட்டடிப்படையில் செயலாற்றும் ஜனநாயக நடவடிக்கை எவ்விதத்திலும் தலைமைத்துவமற்ற தன்மையைக் குறிப்பதாக அமையாது. ஒழுங்குபடுத்தி முன்னெடுத்து செல்லும் ஸ்தாபன ரீதியான பாத்திரத்தைக் கொண்ட தலைமைத்துவத்திலேயே இச்செயற்பாட்டின் வெற்றி முழுமையாக தங்கியுள்ளது. இச்செயற்பாட்டின் உள்ளடக்கம் மற்றும் ஒழுங்குபடுத்தல் தொடர்பாக யோசனைகளை முன்வைத்து இம்முழுச் செயற்திட்டத்தினைப் பற்றி பொது மக்களுக்கு தெளிவு படுத்துவதும் தலைமைத்துவமே.

இறுதியில் திட்ட ஆவணத்தில் எழுத்துவடிவிலுள்ள கட்சியின் அரசியல் அடையாளமானது தங்களால் தீர்மானிக்கப்பட்ட, தங்களின் ஒரு பகுதியாகும் என்ற நியாயமான உணர்வை அங்கத்தவர்களுக்கு ஏற்படுத்துவதே கட்சிக் கோட்பாட்டை உருவாக்குவதன் நோக்கமாகும். எனினும் எல்லா கட்சி அங்கத்தவர்கள் அல்லது ஸ்தாபனங்களின் தனிப்பட்ட கோரிக்கைகள் அல்லது வேண்டுகோள்கள் அடிப்படைத் திட்டத்தில் உள்ளடக்கப்படும் என்ற அர்த்தமல்ல. கட்சியின் கொள்கைகள் மற்றும் பொது வழிகாட்டிகளையும் நிலைநாட்ட இடைநிலை மட்டமொன்று அவசியம். அத்துடன் குறிப்பிட்ட நடவடிக்கைகளைச் செயற்படுத்த போதுமான

இடமளிக்கப்பட வேண்டும். சுதந்திரம், நீதி, ஐக்கியம் போன்றவற்றை ஒருவர் எவ்வாறு புரிந்து கொள்கிறார் என்பதை உணர்த்தும் கட்சியின் அடிப்படைப் பண்புகளில் முக்கிய கவனம் செலுத்தப்பட வேண்டும். மேலும் இவ்வடிப்படைப் பண்புகள் எவ்வாறு பொதுவாக பொருளாதாரம், அரசு மற்றும் சமூகத்தை மாற்றியமைக்கின்றது என்பதையும் உணர்த்துகின்றது.

திட்ட உருவாக்கலின் ஒருங்கிணைந்த வெற்றிக்கு கீழ் மட்டத்தில் விருப்பங்கள் கோரிக்கைகள் மற்றும் இலக்குகளை கொண்ட அடிமட்ட முன்னெடுப்புகளால் ஏற்பட்டதா, அல்லது மேலே தலைமைத்துவத்தால் அல்லது உடன்படிக்கையின் திருத்த ஆவண வடிவில் முன்வைக்கப்பட்ட கோரிக்கைகள் அல்லது பிரேரணைகள் மூலமாக ஏற்பட்டதா, என்பது முக்கியமல்ல. கட்சித் தலைமைத்துவமானது தன்னுடைய சொந்த திருத்த ஆவணத்தைக் கலந்துரையாடலுக்கு முன்வைத்தால் நடைமுறை மற்றும் அடையாளக் காரணங்களுக்காக முழு கட்சியினதும் தனிப்பட்ட பிரதிநிதிகள் இதில் பங்குபற்றுவதை உறுதி செய்ய வேண்டும்.

ஓர் திட்ட உருவாக்கல் செயற்பாடு எவ்விதத்தில் ஆரம்பிக்கப்பட்டிருந்தாலும் பெரும்பாலான அங்கத்தவர்களும், முடிந்தவரையில் சமூகமும் இத்திட்டமிடலில் பங்குபற்றுவதை தலைமைத்துவம் உறுதி செய்ய வேண்டும். இதற்கு பல்வேறுப்பட்ட செயற்பாடுகளும் சாதனங்களும் உள்ளன.

அவையாவன:

- பால்ரீதியிலான, பிராந்திய மட்டத்தில், அரசியல் உருவாக்கம், சமூகப் பிரிவுகள் மற்றும் கட்சிக் கடமைகள் போன்றவைகளை உள்ளடக்கி மத்திய திட்ட ஆணைக்குழு ஸ்தாபிக்கப்படல். திட்ட உருவாக்கலையும் செயற்பாட்டையும் சகல தனிப்பட்ட பிரேரணைகளையும் ஒருங்கிணைக்கும் கடமைகளையும் இணைத்துச் செயற்படல்.

- அடிப்படைப் பண்புகள் மற்றும் இலக்குகள் தொடர்பாக கட்சித் தலைமைத்தவம், அங்கத்தவர்கள் மற்றும் சமூக பிரதிநிதிகள் ஒருவரோடொருவர் கலந்துரையாடும் பொது வட்ட மேசை கலந்துரையாடல்கள்.

- ஒரு பிராந்தியத்தின் அங்கத்தவர்கள் ஒருவரோடொருவர் அறிமுகஞ் செய்து பழக்கபடுத்திக் கொண்டு அவர்களுடைய வெவ்வேறு மட்டத்தில் திட்டத்தின் திருத்த ஆவணங்களை அலசி ஆராய்ந்து மற்றும் தனிப்பட்ட கோரிக்கைகள் தொடர்பாக கட்சித் தலைமைத்துவத்தின் கருத்துக்களை அறிந்து செயலூக்கத்துடன் கடமையாற்ற வழிவகுக்கும் பிராந்திய மாநாடுகளும் வட்ட மேசைகளும்.

- சஞ்சிகைகளில் விவாதங்கள், கட்சி சஞ்சிகைகளில் நீண்ட மற்றும் தீவிரமான விவாதங்கள் மற்றும் இயலுமானவரை பொது மக்களுக்கான

சஞ்சிகைகளில் தனிப்பட்ட கோரிக்கைகள், சச்சரவு மிக்க நிலைப்பாடுகள், மற்றும் கட்சிக்கு வெளியிலான நிபுணர்களின் கருத்துக்கள் போன்றவற்றை உள்ளடக்கல்.

- ஆர்வலர்களால் தனிப்பட்ட கோரிக்கைகளை தீவிரமாக கலந்துரையாட கட்சியின் உள் மட்டத்திலும் உயர்மட்டத்திலும் செயற்பாட்டு குழுக்கள்

- இணையத்தள விவாதங்கள் மற்றும்

- அங்கத்தவர்களின் ஆய்வு

பொதுமேடையொன்றினை உருவாக்கும் செயற்பாடு மும்மடங்காக உறுதிப்படுத்தும் வினைத்திறன்மிக்க பொது அடையாளத்தை உருவாக்கும். தலைமைத்துவத்தின் திட்டச் செயற்பாட்டில் அபிவிருத்தி செய்யப்படுபவை கட்சியின் அரசியல் அடிப்படை என்பதை நடவடிக்கைகள் மூலமாக தெளிவாகக் காட்டி நியாயப்படுத்தல் அவசியமாகும். திட்டத்தின் அரசியல் அடையாளத்துக்கமைய அங்கத்தவர்களின் நடவடிக்கைகளையும் நிலைப்பாட்டையும் சமூகத்திற்கும் அரசியல் பிரதிநிதிகளுக்கும் முன்வைத்து மதிப்பிடுவதன் மூலம் இச்செயற்பாட்டில் இணைந்து காணப்படுகின்றனர். கட்சியானது நம்பகத் தன்மை கொண்டதாகவும் மக்களின் ஆதரவைப் பெற்றுக் கொள்வதற்கு தகுதியானதாகவும் தொடர்ந்து நிலைக்க வேண்டுமாயின், அதன்

நடவடிக்கைகள் மூலமாக முன்வைக்கப்படும் அடிப்படைத் திட்டத்திற்கு குரல் கொடுத்து நிலைத்து நிற்க வேண்டும். இக்காரணத்தால் பொது மக்களைப் பொருத்த வரையில் முழு கட்சியுமே இச்செயற்பாட்டில் பிணைக்கப்பட்டுள்ளது.

> ஜனநாயக இணைப்பில் சகலராலும் உருவாக்கப்பட்ட அடிப்படைத் திட்டமானது, வெகுஜன அங்கத்துவக் கட்சியை ஒன்றிணைப்பதுடன் கட்சிக்கு புறம்பானவர்க்கு அத்திட்டத்தை இனம் காணக் கூடியதாகவும் இருக்கும்.

மெய்யான வெகுஜன அங்கத்துவ கட்சிகளுக்கு மும்மடங்காக இணைக்கும் வினைத்திறன் அத்தியாவசியமானதொன்றாகும். இது பொதுவாக அங்கீகரிக்கப்பட்ட அரசியல் அடையாளத்தைப் பொருத்தவரையில் அங்கத்தவர்களை ஐக்கியப்படுத்துகிறது. குறிப்பிட்ட தலைமைத்துவத்தை நியாயமான காரணத்திற்காகவும் செயலூக்கத்துடனும் கட்டுப்படுத்த வழி வகிக்கின்றது. அத்துடன் சமூகத்திலும் சகல அரசியல் ஸ்தாபனங்களிலும் அங்கீகரிக்கப்பட்ட கொள்கைகளை தெளிவாகவும் வினைத்திறனுடனும் முன்வைத்து சிபாரிசு செய்ய இது உதவுகின்றது.

வெகுஜன அங்கத்துவக் கட்சியின் அடிப்படைத் திட்டத்தை உருவாக்குகையில் பல முக்கிய செயற்பாடுகளை நிறைவேற்ற வேண்டும் என்பதை மனதில் கொள்ள வேண்டும்.

- கட்சிக்கு அரசியல் அடையாளத்தை உருவாக்கல்

- நாட்டில் பொது மக்கள் மத்தியில் தலைமைத்துவத்தின் செயற்பாட்டுக்கும் நாட்டின் அரசியல் நிறுவனங்களில் அவர்களின் செயற்பாட்டுக்கும் இடையில் இணைப்பு இயல்பினை ஏற்படுத்தல்

- தற்பொழுதுள்ள மற்றும் புதிய அங்கத்தவர்களை அரசியலில் சமூகமயமாக்கல்

- பொது இடங்களில் கட்சியின் குறிக்கோள்கள் தொடர்பாக தகவல்களை வழங்கி விளம்பரப்படுத்தல்

மேற்குறிப்பிட்ட அனைத்துக் குறிக்கோள்களும் சம மதிப்புடையவை. அத்துடன் இவை ஏற்றுக்கொள்ளப்பட்ட தெளிவான மொழியில் விளங்கக்கூடிய வகையில் எழுதப்பட வேண்டும்..

# 9. அரசியல் கலாசாரமும் கட்சி உருவாக்கமும்

மரபு ரீதியாகவும் ஜனநாயகத்தை நோக்கி செல்லும் நாட்களில் அதிகார தோரணையிலான தலைமைத்தவக் கட்சிகள் பரவலாக காணப்படுகின்றமை புரிந்து கொள்ளக்கூடிய ஒரு விடயமாகவுள்ளது. இது நாட்டின் அரசியல் கலாசார அபிவிருத்தியின் ஏதோவோர் கட்டத்தில் அநேகமாக தங்கியுள்ளது. சமூகத்தில் நிலமானிய பண்ணை முறை கட்டமைப்புகளும், அதிகார தோரணையிலான முடியாட்சி முறைகளும் அதிகார தோரணையிலான ஆதரவாளர் சார்ந்த கலாசாரத்தினை நோக்கி செல்லும். இது நாளாந்த அரசியல் அனுபவங்களைச் சார்ந்த சமூகத்தில் ஆழமாக வேரிட்ட நடவடிக்கைகளின் விளைவாகும்.

சமமற்ற பரிமாறல் மூலமே அரசியல் அடிப்படையில் நிலைத்திருக்கின்றதென்ற எண்ணமானது சார்பாளர் அல்லது ஆதரவாளர் சார்ந்த அரசியல் கலாசாரத்தில் தங்கியுள்ளது. அங்கத்தவர்களின் ஆதரவிற்கும் நேர்மைக்கும் பரிமாற்றமாக பாதுகாப்பு, வளங்கள் மற்றும் உயர் பதவிகளுக்கான சந்தர்ப்பங்கள் போன்றவற்றை

குறிப்பிட்ட அதிகார தோரணையிலான தலைவர்கள் வழங்குவார்கள் என்ற எதிர்பார்ப்பை முக்கியமாக உள்ளடக்கிய, அபிவிருத்திக் கட்டத்திலிருக்கும், ஜனநாயகத்துக்கு முன்னரான அரசியல் கட்டமைப்புகளையே இப்பரிமாற்றம் குறிக்கின்றது.

இவ்வாறான சார்பாளர் அல்லது ஆதரவாளர் குழுவானது பங்களிப்பு தவிர்ந்த சேவையினையே குறிக்கின்றது. இத்தலைவர்களை பின்பற்றும் நியாயமான எண்ணிக்கையிலான மக்கள் எதிர்பார்க்கும் மானியங்கள், வருமானத்திற்கான சந்தர்ப்பங்கள், அல்லது பாதுகாப்பு போன்ற வளவடிவிலான சேவைகளை தலைவர்கள் வழங்க முடியுமானால், இவ்வாறு பின்பற்றுபவர்களின் ஆதரவையும் நேர்மையையும் அதற்கு பரிமாற்றமாக ஏகாதிபத்திய தலைமைத்துவங்கள் எதிர்பார்கின்றன.

ஆதரவாளர் குழுக்கள் சார்ந்த மாதிரிகள் இவ்வாறான பாதுகாப்புச் சேவைகளின் பங்களிப்பு மற்றும் ஆலோசனை போன்றவை தொடர்பாகவும் குறிப்பிட்ட வளங்களை பெற்றுக் கொடுப்பதற்கு தலைமைத்துவங்கள் பிரயோகிக்கும் யுத்திகள் பற்றியும் அறிந்திராமல் இருக்கின்றனர். இரு பகுதியினருக்கும் இது வெறுமனே ஒரு சேவை பரிமாற்றமாகும். அதாவது கட்சி ஆதரவாளர்களுக்கு தலைமைத்துவத்திலிருந்து கிடைக்கக்கூடிய ஆதரவும் சேவைகளும் ஆகும்.

பொதுவாக ஸ்தாபிக்கப்பட்டு பங்குபற்றும் அனைவராலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட கலாசார நிபந்தனைகளில், தலைமைத்துவம் வினைத்திறனுடன் செயற்பாடுகளை கொண்டு செல்வதற்கு தடைக்கல்லாக, ஆதரவாளர்கள் தீர்மானங்களில் பங்களிப்பு செய்வதாக அமையும் என கருதுகின்றனர். தலைமைத்துவத்தினால் வளங்களை பெற்றுக்கொள்ளும் சலுகை, பிறப்புரிமை சார்ந்த சட்டப்பூர்வமான காரணங்கள், அல்லது இம்முறைகள் எவ்வாறு செயற்படுகின்றன என்ற உயர்வான கலாசார அரசியல் அறிவு தொடர்பான காரணங்களினாலும் இவ்வாறு கருதலாம். முடிவில் இதனால் அனைவரும் பாதிக்கப்படலாம்.

குறிப்பிட்ட ஆதரவாளர்கள் கல்வியறிவற்ற வறுமையான உழவர்களாகவும், நாட்கூலிக்கு தொழில் புரிபவர்களாகவும் உள்ள காரணத்தால் தங்களுடைய கட்டப்படுத்தப்பட்ட சந்தர்ப்பங்களைக் கருத்தில் கொண்டு இம்மாதிரி முழுமனதுடன் ஏற்றுக் கொள்கின்றனர். இவர்களைப் பின்பற்றும் அனைத்து ஆதரவாளர்களும் இவ்வாறான அதிகார தோரணையிலான பரிமாற்ற உறவுமுறையை நியாயமானதாக ஏற்றுக் கொள்ளும் அதேவேளை இதனைத் திருத்தம் அல்லது மாற்றம் தேவைப்படும் குறைபாடுள்ள ஒரு பொறிமுறையாக கருதவில்லை.

ஜனநாயக ரீதியாகத் தீர்மானங்கள் எடுக்கும் செயற்பாடுகளின் மூலம் நாட்டின் முழு அரசியல் முறைமையானது மாற்றியமைக்கப்பட்டால் சார்பாளர் தொகுதி அபிவிருத்தியைத் தடுத்துவிடும். பொருத்தமான ஜனநாயக கலாசாரமானது அநேக சந்தர்ப்பங்களில் ஜனநாயக நிறுவனங்களின் உருவாக்கத்தில் பின்தங்கியிருப்பதால் பல நாடுகளில் அரசியல் அபிவிருத்தி ஓர் பாரிய பிரச்சனையாகவுள்ளது.

ஜனநாயக ஸ்தாபனங்களுக்கு எதிராக நிற்கும் சார்பாளர் தொகுதி கலாசாரத்தின் மத்தியில் முன்னர் உருவாக்கப்பட்ட ஜனநாயக ஸ்தாபனங்கள் செயற்பட்டு வருகின்றன. இவ்வாறு அமையும் சந்தர்ப்பங்களில் ஆதரவாளர் குழுவின் நடவடிக்கைகளுக்கு அப்பால் செல்ல கூடிய தன்மை ஏற்படும். ஏனெனில் ஜனநாயக ஸ்தாபனங்களை விட அதிகார அரசியல் கலாசாரம் இவற்றின் • மெய்யான கருத்தையும் நியாயமான கோரிக்கையையும் நிராகரிக்கலாம். தற்பொழுது காணப்படும் ஸ்தாபனங்கள், முக்கியமாக அரசியல் கட்சிகள் வெளியில் ஜனநாயக செயற்பாடு கொண்டவையாக தென்பட்ட பொழுதிலும் அவை பழைய ஜனநாயகத்துக்கு முன்னரான கலாசார தரத்திலேயே செயற்படுகிறன்றன.

அநேக சந்தர்ப்பங்களில் சார்பாளர் தொகுதி சார்ந்த நிலை நியாயமானது அல்லது சட்டபூர்வமானது என பெரும்பாலான கட்சி அங்கத்தவர்கள் நம்புகின்ற காரணத்தால் ஜனநாயக நிபந்தனைகளின் அடிப்படையில் செயற்படுவது கடினமான காரியமாகவுள்ளது. இம்முறையின் கீழ் ஜனநாயக செயற்பாட்டாளர்கள் பாதிக்கப்பட்டு இம்முறையை இனிமேலும் ஏற்காது சகலரும் பங்களிப்பு செய்யும் ஜனநாயக கலாசார மாற்றத்தின் சார்பாக வாதாடுகின்றனர். இவ்வாறான சிக்கல் நிலை பொதுவாக குறிப்பிட்ட கட்சிகளை ஆட்டங்காண செய்கின்றது. அத்துடன் அவற்றின் பலமும் அதிகாரமும் குறைந்து போக வழிவகுக்க இடமுண்டு.

கடமையாற்றும் ஆர்வமும் ஜனநாயக கட்சிகளின் சட்டபூர்வ நிலையை பாதுகாக்கவும் கட்சியின் செயற்பாட்டிலுள்ள தலைவர்கள் ஜனநாயக செயற்பாட்டாளர்களுடன் ஓர் ஒப்பந்தத்திற்கு வருவதற்கு உடன்பட்டால் சகலரும் பங்களிப்பு செய்யும் உட்கட்சி ஜனநாயகத்தை ஸ்தாபிப்பது இலகுவான விடயமாகும். இலக்குகள் தெளிவாகவும் அதன் சக்தி இச்செயற்பாட்டில் குறையாது காணப்பட்டால் இது படிப்படியாக சாத்தியப்படும் ஓர் விடயமாகும். எனினும் இப்படிகள் செயற்திறன்மிக்கவையாகவும், நேர்மையானவையாகவும் மற்றும் ஜனநாயக திருத்தங்களிலிருந்து விலகிச் செல்லாது அல்லது தவறாக புரிந்து கெள்ளப்படாத வகையிலும் செயற்பட வேண்டும்.

# 10. கட்சிகளும் சிவில் சமூகமும்

அரசியல் முறைமையில் கட்சி அங்கத்தவர்கள் சிவில் சமூகத்திற்கும் கட்சி ஸ்தாபனங்களுக்கும் இடையிலான இணைப்பாக செயற்படுகின்றனர். அதனால் கட்சி அங்கத்தவர்களுக்கு அரசியல் முறையில் தனித்தனியே கட்சிகளுக்கும் சிவில் சமூகங்களுக்கும் சார்பான கடமைகளும், செயற்பாடுகளும் உள்ளன. இவர்களாளேயே வெகுஜன ஊடக கலாசாரத்தில் ஜனநாயகத்தின் மூன்று அத்தியாவசிய செயற்பாடுகள் பூர்த்திசெய்ய முடியும். இச்செயற்பாடுகள் மூலமாக அரசியல் முறைமையுடன் சமூகமானது திறந்த வினைத்திறன் மிக்க வகையில் தொடர்புபடுத்தப்படும்.

1. மக்களின் நாளாந்த வாழ்வில், அதாவது வேலை ஸ்தலங்கள், வீடுகள் மற்றும் சிவில் சமூக மன்றங்களிலும் சமூக தொடர்பாடலை மேற்கொள்ளும் சந்தர்ப்பங்களை ஒழுங்கு செய்து ஊக்கத்துடன் பங்குகொள்ளவும் செயற்ப்படவும் முன்வர வேண்டும்.

2. நாளாந்த வாழ்விலும் சிவில் சமூகத்திலும் கட்சியின் அடையாளப்பிரசன்னத்தை ஏற்படுத்த முயற்சிக்க

வேண்டும். அதன் மூலம் கட்சிகள் சமூகத்தின் ஒரு பகுதி என்பதனையும் நாட்டின் பிரஜைகளை விட்டு விலகியிருக்கும் ஓர் அரசியல் முறையல்ல என்பதனையும் தெளிவுபடுத்தலாம். கட்சிகளுக்கும் சமூகங்களுக்கும் இடையிலான பிளவை இதன் மூலம் மாத்திரமே குறைக்கலாம்.

3. கட்சி அங்கத்தவர்களில் சமூக வித்தியாசங்கள் வேறுபட்ட சமூக வழக்கங்கள், எண்ணங்கள், அனுபவங்கள், எதிர்பார்ப்புகள் மற்றும் வாழ்க்கை முறையைக் கொண்ட கட்சியை உறுதி செய்யும். அதன் மூலமாக அரசியல் திருத்த ஆவணங்கள், பலவிதமான தொடர்பாடல்கள், அடையாளச் செயற்பாடுகள் மற்றும் புதிய விடயங்கள் கொண்ட முழு சமூகத்தையுமே பிரதிநிதித்துவப்படுத்தும் கட்சியாக மாறலாம்.

செயலூாக்கமிக்க அங்கத்தவர்கள் அதிக எண்ணிக்கையில் காணப்படாத பட்சத்தில் கட்சிகள் ஆதரவைத் திரட்டவும் நிலையான விதத்தில் சமூக அபிவிருத்தி மற்றும் கண்டு பிடிப்புகளுடன் கட்சிகளின் தொடர்பை பேணுவதும் முடியாத காரியமாகக் கருதப்படும்.

சகலரும் பங்கு கொள்ளும் ஜனநாயகத்தையும், உட்கட்சி ஜனநாயகத்தின் மேம்பாட்டையும் ஓர் ஆர்வமுள்ள சிவில் சமூகமே உறுதி செய்யும். பொது நலத்திற்காகத் தொண்டு புரியும் மற்றும் இணை செயற்பாடுகளை

சுயமாக ஒழுங்கு செய்யும் பிரஜைகளே ஜனநாயகத்தை வரையறை செய்கின்றனர். இச்செயற்பாட்டில் சிவில் சமூகங்கள் எக்காரணத்தாலும் அரச ஸ்தாபனங்களுக்கு பதிலாக இயங்க முடியாது. அதன்படி உறவுகளை தொலைவாக்கிக் கொள்வதை தவிர்த்து செல்வாக்கையும் கட்டுப்பாட்டையும் உலகளவில் இழந்துவிடாது செயற்படவேண்டும். அரசு பல நிபந்தனைகளை சிறப்பாக நிறைவேற்றுமென சிவில் சமூகம் எதிர்பார்க்கின்றது. முழு சமூகத்தையும் ஒழுங்குபடுத்தும் அரசியல் தேவையை பொறுத்தவரையில் சிவில் சமூகம் கட்டுப்படுத்தப்பட்டுள்ளது.

சிவில் சமூக செயற்பாடு பின்வருவனவற்றால் தீர்மானிக்கப்டுகின்றது.

- தம்முனைப்பான தொண்டர் ஈடுபாடு
- சுயமாக ஒழுங்குபடுத்தல்
- பொது நலத்தில் பிரதான ஈடுபாடு

மக்கள் தாம் தெரிவு செய்த தொழிலின் அடிப்படையில் ஆறு சமூக மற்றும் அரசியல் செயற்பாடுகள் காணப்படுகின்றன. இவை பல்வேறு ஒற்றுமைகளுடன் அரசியல் சாத்தியக் கூறுகளையும் பின்விளைவுகளையும் கொண்ட சிவில் சமூகத்தின் செயற்பாடுகளாக உள்ளன:

- இணைந்த சமூக சுய ஒத்துழைப்பு
- நட்பு ரீதியான ஒத்துழைப்பையும் சமூக மூலதனத்தையும் அபிவிருத்தி செய்தல்

- அரசியல் முறைமையிலான ஸ்தாபனங்களுக்காக ஆதரவு திரட்டல் (ஜனநாயக முற்போக்கு தலையீட்டு செயற்பாடுகள்)
- சமூகத்தை அரசியல் ரீதியில் சுயமாக ஒழுங்குபடுத்தல் (ஜனநாயகக் குடியரசின் சுயாட்சி செயற்பாடு)
- பொதுமக்கள் சுயமாகப் புரிந்துணர்வை அதிகரிக்க அரசியல் பேச்சுவார்த்தை மற்றும் கலந்துரையாடல்
- பிரஜைகளின் அரசியல் சமூகமயமாக்கல்

பிரஜைகளின் அரசியல் சமூகமயமாக்கலும் ஒற்றுமையின் மீள் உருவாக்கம் குறித்த உடன்பாடும் சிவில் சமூகத்தின் செயற்பாடுகளின் விளைவுகள் மட்டுமே. இவை இரண்டும் சமூக கல்வி முறையை விட நம்பகத்தன்மை மிக்கதாய் நிரந்தரமாக ஸ்தாபிக்கப்பட்டுள்ளது. இதனாலேயே சிவில் சமூகத்தின் செயற்பாடுகள் ஜனநாயக கொள்கைகளுக்கு அத்தியாவசியமாகின்றன.

தேவைப்படும் பொழுதும் பொருந்தும் வகையிலும் கட்சிகள் சமூகத்தின் ஜனநாயகப் பங்களிப்பிற்கு ஆதரவளித்து முன்னெடுத்து செல்ல வேண்டும். அரசியல் நடவடிக்கைகளில் பிரஜைகளின் விவேகமான ஈடுபாட்டிற்காக பாரிய சிவில் சமூக மன்றமாக கட்சி உட்கட்டமைப்பை முதலில் ஒழுங்குபடுத்த வேண்டும். மேலும் பல்வேறு உள்ளூர் மற்றும் பிராந்திய கட்சி ஸ்தாபனங்களுக்கு அதிகாரத்தை வழங்கி

செயலூக்கமிக்க அங்கத்தவர்கள் சிவில் சமூக ஜனநாயகத்திற்காக செயலாற்றுவதை குறிக்கும்.

அதனால் சிவில் சமூகத்தின் ஆரம்ப நிலைகளாக அங்கத்தவர்கள் மாறுவதற்கு அரசியல் கட்சிகள் அவர்களை நன்கு ஒழுங்குபடுத்தி தீர்மானங்களில் சரிவர ஈடுபடுத்தல் வேண்டும். அதேவேளை அவர்கள் சிவில் சமூகத்திற்கும் அரசியல் கட்சிகளுக்கும் ஒரு பாலமாக அமையலாம். இந்நிலையில் இச்செயற்பாடுகளை வினைத்திறனுடன் நம்பத்தகுந்த விதத்தில் மேற்கொள்ள கடமையாற்றும் விதம், சமூக சுய புரிந்துணர்வு மற்றும் கட்சி அங்கத்தவர்களின் செயற்பாடுகள் போன்றவற்றை பொறுத்தவரையில் நீண்டகால நிலையான சீர்திருத்தங்கள் தேவைப்படுகின்றன.

அரசியல் கட்சிகள் ஜனநாயக ரீதியில் ஒழுங்குபடுத்தப்பட்டு சிவில் சமூகத்தில் உள்ளடக்கப்பட்டால் ஜனநாயகத்தின் முக்கிய காரணிகளாக இவை அமையும். ஏனைய அரசியல் ஸ்தாபனங்களில் இவை முக்கிய இடத்தை பிடித்துள்ளன. பல சிவில் சமூக முயற்சிகளினதும் விஷேட ஆர்வலர் குழுக்களினதும் எண்ணங்கள், ஆர்வங்கள் மற்றும் பண்புகளை கொண்டிருக்கும் கட்சி கோட்பாட்டடிப்படையை அபிவிருத்தி செய்யும் செயற்பாடு அவர்களுடையதாகையால் அது முதலில் முக்கியத்துவத்தை பெறுகின்றது. ஒரு கையில் சமுதாயத்தினைக் கருத்தில் கொண்டும் மறுகையில்

அநேகமான நிறுவனங்கள் தங்களுடைய ஆர்வங்களையும் அக்கறைகளையும் இனங்கண்டு கொள்ள வேண்டும். இதுவே ஒருங்கிணைப்பு என்னும் அரசியல் செயற்பாடு. ஒரு புறம் கட்சிகள் சிவில் சமூக வாழ்வில் உள்ளடக்கப் பட்டிருப்பதாலும் மறுபுறம் பாராளுமன்றத்திலும் அரசாங்கத்திலும் பிரதிநிதித்துவப்படுத்தப்படும் அரச ஸ்தாபனங்கள் சட்டதிட்டங்களை அங்கீகரிக்க முடிவதாலும் சமூக ஆர்வங்களுக்கும் அரச நடவடிக்கைகளுக்குமிடையில் மத்தியஸ்தம் செய்யவதற்கு அரசியல் கட்சிகள் முக்கியமாகும். வேறுப்பட்ட பாத்திரங்களை கொண்ட அரசாங்க கட்சிகளுக்கு எதிராக, சமூகத்தில் தேவைகளை, கோரிக்கைகளை செயற்படுத்த அரசியற் கட்சிகளால் முடிவதுண்டு.

கட்சிகள் ஜனநாயக ரீதியில் ஒழுங்குபடுத்தப்பட்டிருப்பின் இக்கடைமைகள் மேலும் திறமையான வகையில் மேற்கொள்ளப்படலாம். கட்சி ஜனநாயகமும் கூட்டு நடவடிக்கைகளும் ஒன்றையொன்று மறுத்து செயற்படும் விடயமல்ல. தீர்மானங்கள் எடுக்கும் நடவடிக்கைகள் ஜனநாயக ரீதியில் திருப்திகரமாக ஒழுங்கு செய்யப்பட்டிருப்பின் தீர்மானங்கள் பொதுமக்களுடன் திருப்திகரமாகவும் முறையாகவும் பரிமாறப்பட அங்கத்தவர்கள் வினைத்திறனுடன் கோரலாம். நல்ல தலைமைத்துவம் பல்வேறு நிலைப்பாடுகளை அங்கீகாரத்துடன் ஒருங்கிணைத்து அங்கத்தவர்களின் கட்டுப்பாடு மற்றும் கட்சித் தேவைகளிலிருந்து விலகி

நிற்காது செயற்படுவதனால் தலைமைத்துவமும் ஜனநாயகமும் ஒன்றையொன்று எதிர்ப்பதில்லை.

திடமாக கட்சியைப் பின்பற்றுபவர்கள் அதிகார தோரணையிலான தலைமைத்துவத்தை வலம் வருவதனாலும் செல்வாக்கு மிக்க சிறிய குழுக்கள் அவர்களை ஆதரித்து பாதுகாப்பளித்து வருகின்றநிலையில் சமூக வாழ்க்கையில் ஆழமாக நிலைநாட்டப்பட முடியாத தன்மை ஏற்படும். கட்சிகளின் திறந்த அல்லது வெளிப்படையாக செயற்பாட்டால் அரசியலுக்கும் சமூகத்திற்குமிடையில் மத்தியஸ்தம் செய்வதன் மூலம் ஜனநாயக ஒருங்கிணைப்பின் தேவையை நிறைவேற்றலாம். 'வெளிப்படை' என்ற பதத்தின் கருத்து பல்வேறுபட்ட இனம், மதம், சாதி, பால், உலக நோக்கு மற்றும் சமூகப் பின்னணியைக் கொண்ட மக்கள், கட்சியின் தெளிவாக வரையறுக்கப்பட்ட கொள்கைகளையும் அரசியல் குறிக்கோள்களையும் ஆதரிக்க உடன்பட்டால் அவர்கள் வெளிப்படையான திறந்த மனப்பான்மையுடன் செயற்படுவதை குறிக்கும். அவர்கள் அநேகமாக சமூகத்திற்கு வெளிப்படையான தன்மையுடன் தென்படுவதோடு கட்சிக்குள்ளேயும் திறந்த மனப்பான்மையுடன் நடந்து கொள்கின்றனர். ஜனநாயகமானது ஒத்துழைப்பையும் ஒருங்கிணைப்பையும் குறிக்கும். இக்கொள்கைகள் ஸ்தாபனத்தில் சுயபுரிந்துணர்வும் அரசியல் கலாசாரமும் ஜனநாயகத்தின் அங்கங்களாக பிரதிபலிக்க வேண்டும்.


## கட்சிகளின் முக்கிய பங்கு

சிவில் சமூகத்தில் அவசியப்படும் வகையில் அனைத்து ஸ்தாபனங்களிலிருந்தும் முயற்சிகளிலிருந்தும் கட்சிகள் தம்மை வேறுபடுத்திக் காட்ட முனைகின்றன. பாராளுமன்றப் பதவிகளுக்கு கட்சிகளே போட்டியிடுகின்ற காரணத்தால் தேர்தலின் வெற்றிகளுக்கமைய அரச அதிகாரத்தை உபயோகிக்கின்றன. ஒரே வேளையில் இவை அரசினதும் சமூகத்தினதும் அங்கங்களாக விளங்குகின்றன. அதனால் அனைத்து அரசியல் கூட்டுக்களோடுமான தொடர்பில் அரசியல் முக்கியத்துவத்தைப் பெறுகின்றன. இம்முக்கியத்துவத்தால் அனைத்து அரசியல் ஸ்தாபனங்களும் சில அரசியற் கட்சிகளுடன் ஓர் நல்ல இணக்கத்தினை உருவாக்க முனைகின்றன. இதன் மூலமாக அவர்களது பிரதான அரசியல் குறிக்கோள்களை நிறைவேற்ற முடியுமாயிருக்கின்றது. கட்சிகளிடமிருந்து விலகி நின்று சுதந்திரமாக இயங்கும் செயலூக்கமிக்க சிவில் சமூகத்தின் மீது கட்சிகள் ஆர்வம் காட்ட வேண்டும். ஜனநாகத்திற்கும் அரசியல் கட்சிகளினது வளமான மேம்பாட்டிற்கும் சிவில் சமூகமே முக்கிய சக்தியாக விளங்குகின்றது.

> முழு நாட்டினதும் அரசியல் கட்சிகளினதும் ஜனநாயகத்தினதும் வளர்ச்சிக்கு சிவில் சமூகங்களுக்கும் அரசியல் கட்சிகளுக்கும் இடையிலான நல்ல இணைப்பு ஒரு முக்கிய தேவையாகும்.

## முடிவுரை

அரசியல் கட்சிகள் இல்லாது நவீன வெகுஜன ஜனநாயகத்தை உருவாக்க முடியாது. ஜனநாயக செயற்பாடுகளையும் சமூகக் கடமைகளையும் செவ்வனே நிறைவேற்ற கட்சிக்குள் ஜனநாயகம் காணப்படுவது மிகவும் அவசியம். அடிப்படைப் பண்புகளையும் குறைந்த பட்ச நிபந்தனைகளையும் ஸ்தாபிக்கும் கட்சியின் சட்டம் இதற்கு ஒத்துழைப்பு வழங்கலாம். கட்சியினது நாளாந்த கடமைகளில் தென்படும் அபாயங்களில் அதிகளவிலான செயலூாக்கமிக்க கட்சி அங்கத்தவர்கள் கவனஞ் செலுத்தினால் உட்கட்சி ஜனநாயகம் நிச்சயமாக இயங்கும் சாத்தியக்கூறுகள் உள்ளன.



ISBN 978-955-607-052-1